DEPOSITION OF WITNESS

(XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF II ADDITIONAL CITY CIVIL COURT,

CHENNAI-600 104.

**OS 1776/2023**

Deposition of witness DW1

Name : Saravanan

Father Name :

Age :

Address :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 28th day of January 2025.

---

**28.01.2025**

Cross continuation

வாசா ஆ 2 ல் உள்ள நபர்கள் தான் பாலசுப்பிரமணியத்தின் வாரிசுதாரர்கள் என்றால் சரிதான். பாலசுப்பிரமணியத்தின் வாரிசுதாரர்களுக்கு அவர் சொத்தில் சமபங்கு இல்லை ஏனென்றால் அவர் மகள்களுக்கு அவர்கள் திருமணத்தின்போதே அவர் சீர்வரிசை கொடுத்துவிட்டார்.இந்த விவரத்தை நான் என்னுடைய பதிலுரையிலோ முதல் விசாரணை வாக்குமூலத்தலோ நான் குறிப்பிட்டு சொல்லவில்லை அதற்கான வாய்ப்பு எனக்கு கிடைக்கவில்லை. வாதி பாலசுப்பிரமணியத்தின் மகள் என்ற காரணத்தினால் அவருக்கு பாலசுப்பிரமணியத்தின் அனைத்து சொத்துக்களிலும் 1/4 பங்கு உரிமையுள்ளது என்றால் சரியல்ல. வாதி கோரியபடி அவருக்கு பாகம் கிடைக்ககூடியதுல்ல என்பதை நிரூபிக்கும் பொருட்டு இந்த வழக்கில் ஆவணம் தாக்கல் செய்யவில்லை. அதற்குரிய வாய்ப்பு கிடைக்கவில்லை. ஏனென்றால் அனைத்து ஆவணங்களும் என் அண்ணன் தாக்கல் செய்த வழக்கில் போட்டுள்ளேன். வாசா ஆ 5 மற்றும் 6 ல் எங்களுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுக்கப்பட்டது என்றாலும் அதைப்பெற்றுக்கொண்டதற்கு அஞ்சல் ஒப்புகை அட்டை என்றால் சரிதான். அதற்கு நாங்கள் எந்தவித் பதில் அறிவிப்பும் கொடுக்கவில்லை.

ஏனென்றால் பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருக்கிறது.இந்த வழக்கை தாராபுரம் நீதிமன்றத்திற்கு மாற்றக்கோரி உயர்நீதிமன்றத்தில் ஒரு மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த transfer petition 22/7/2024 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் உத்தரவு அது தான். அது வா சா ஆ 10. அதை எதிர்த்து உச்சநீதிமன்றத்திற்கு நான் மேல்முறையீடு செய்யவில்லை. ஏனென்றால் அந்த அளவிற்கு எனக்கு வசதியில்லை.நான் தாவா சொத்தில் வரும் வருமானத்தை வைத்து தான் குடும்பம் நடத்திவருகிறேன் என்றாலும் சரிதான். அதைதவிர்த்து நான் சிறு சிறு வியாபாரமும் செய்து வருகிறேன். எனக்கு 18/1/2025 அன்று ஆவணங்கள் produce செய்யும்படி ஒரு அறிவிப்பு வழங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த அறிவிப்பு வாசா ஆ 11. அந்த அறிவிப்பின் படி ஆவணங்கள் தாக்கல் செய்ய எனக்கு அவகாசம் தேவை. ஏனென்றால் அனைத்து ஆவணங்களும் என் வசம் இல்லை. ஒரு சில ஆவணங்கள் என் அண்ணனிடம் உள்ளது நான் அதை அவரிடம் கேட்டுள்ளேன்.என்னிடம் உள்ள ஆவணத்தை மட்டும் நான் ஆஜர் செய்ய தயாராக உள்ளேன்.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness and admitted and signed by the witness to be correct.

Dt. 28.01.2025 II Addl. District Judge.